சைவ பரிபாலன சபை வெளியீடு.
ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28-ம் உ

உ
சிவமயம்

செய்தித்தாளாகப்
பதிவுபெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை : சதம் 40.

புத்-கூ0 ] யாழ்ப்பாணம். காலயுத்தி ஞூ தை, மாசிமீ வெள்ளிக்கிழமை ( 26-1, 2, 9-2-1979 ) [ இல-ரு௬

## திருக்கோயிலிற் சிரமதானப் பெருக்கமே செல்வம்

### தெல்லிநகர்த் துர்க்கைப் பதியில் நல்லவண்ணம் அமைந்தது

பழைய முறைகளை வழுவாது கடைப்பிடிக்கும் தமிழினப் பெரியோர்கள் கருமங்களைச் சிரமதான நெறியிற்செய்து சிறப்புற முடிப்பதைப் புராணங்கள் போதிக்கின்றன.

சிரமம் பாராது சேவை செய்தல் என்று பலரையும் புகழ்வதைப் பாராட்டு வைபவங்களிலே கேட்கின்றோமல்லவா. இதனைத் தியாகம் என்று மேன்மையுறக் கூறுவதுண்டு. இவ்வழி நின்று கடமையாற்றுவோரைத் தியாகிகள் என உலகம் அழைக்கும்.

தியாகம் என்பது ஒருவர் தான் எவ்வகையிலாவது தனக்குரியதை விரயம் செய்தலும் அதற்கு ஈடாகப் பொருள் ஒன்றையும் பெறாதிருத்தலும் அர்ப்பணம் என்றுசொல்வதையும் இதனோடு ஒப்பு நோக்கலாம். உடல பொருள என்ற மூவகையாகவும் அர்ப்பணம் உண்டு

உடம்பினால் ஒரு கருமத்தைச் செய்து அதற்கு ஊதியம் அல்லது பண்டமாற்றாய் எதனையுமோ பெறாதிருத்தலே சிரமதானம். உழைப்பை நன்கொடைசெய்தல் என்பதே இதன் பொழிப்பு.

திருத்தொண்டர்கள் சிறந்த சிரமதானப் பெரியார்களாய் அறன்பணி ஆற்றினர் என்று பெரிய புராணம் நன்கு விளக்குகின்றது. விசேடமாகத் திருநாவுக்கரசு நாயனார் உழவாரத்தினாலே திருக்கோயில் சுத்தி செய்தமையை உதாரணமாக அறிகின்றோம்.

ஒரு கோயிலைச் சுற்றிப் புல்லும் முள்ளும் அடர்ந்திருந்தால் கூலியாளர்களைக்கொண்டு சுத்தஞ்செய்விக்கும்பொழுது அவர்களுக்கு வேதனம் வழங்கப்படும். தொண்டர்கள் அந்த வேலையைச் செய்தால் அதற்குப் பணம் வேண்ட மறுப்பர். அவர்களின் சிரமம் தருமஞ் செய்யப்படுகின்றது.

இந்த அடிப்படையிலே இந் நாட்டிலே திருக்கோயில்களிற் சிரமதானம் செய்யப்படுவதை எங்கும் காண்கின்றோம். உயர்தரக் கல்விக் கழகங்களிலே ஆசிரியர்களும் சிரேட்ட மாணாக்கர்களும் இந்தப் பணியில் ஈடுபடுவதைப் பார்க்கின்றோம்.

மாவைக் கந்தன் கோயிலிலே இவ்விதமாகச் சிரமதானம் கடேசுவராக் கல்லூரி மாணாக்கர்கள் முன்னின்று அந்த அயலிலுள்ள ஏனைய பாடசாலைப் பிள்ளைகளுடன் செய்யப்படுவது வழக்கம்.



இதே முறையிலே தெல்லிப்பளைத் துர்க்காதேவி ஆலயத்திலே தொண்டர் குழாம் ஒன்று இயங்குகின்றது. தெல்லிநகர் இந்து இளைஞர் சங்கம் என்ற மகுடத்துடன் பணியாற்றும் வாலிபர்கள் பல ஆண்டுகளாகச் சிரமதானத் தொண்டிற் பயிற்சி

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்

### சுழிபுரத்தில் சைவசித்தாந்தக் கல்வி நிலையம்

#### சைவப்பெரியார் நினைவுப்பணியாக ஆரம்பம்

எதிர்வரும் 6-3.79 செவ்வாய்க்கிழமை வரும் கச்சியப்ப சிவாசாரியர் குருபூசையன்று சுழிபுரம் பறாளை சைவ சித்தாந்த சங்கம சைவப்பெரியார் திரு சு. சிவபாதசுந்தரனுர் நினைவாகச சைவசித்தாந்தக கல்வி நிலையம் ஒன்றினை ஆரம்பிக்கின்றது.

இதற்காகிய ஏற்பாடுகளை செயலாளர் திரு. த. மயில்வாகனம அவர்கள் மேற்கொண்டுள்ளார்.

சுழிபுரம் பறாளை ஈசுர விநாயகர் ஆலயத்தில வழிபாட்டுடன் ஆரம்பமாகும். பறாளை முருகன் ஆலயத்தில் கச்சியப்பசிவாசாரியரின கந்தபுராண பாராயணம நடைபெறும்.

சைவப்பெரியாரின அபிமானிகளும் இந்து நாகரிகம் கற்கும மாணவர்களும் பங்குபற்றுவர். விநாயகர் புராணம், திருவாதவூரடிகள் புராணம் பற்றியும சைவசித்தாந்தக் கல்வி நிலையம கவனம் எடுக்கும்.

### கந்தபுராணக் கருவூலம் தந்த கச்சியப்பர் விழா

அகில இலங்கைச் சைவ மகா சபை நடாத்துகின்ற கச்சியப்ப சிவாசாரியர் விழா மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன் மண்டபத்தில் மாசி 19-ம் நாள் (3-3-79) சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 5 மணி வரை நிகழும்.

காங்கேசன்துறை காயாத்துறை ஆனந்தப் பிள்ளையார் கோவிலிலிருந்து காலை 7 மணிக்கு ஏட்டுச் சுவடி ஊர்வலத்துடன் ஆரம்பமாகவிருக்கும் இவ் விழாவில் மாவை ஆதீன கர்த்தா சிவாகம வித்யா பூஷணம் பிரமஸ்ரீ சு. துஷண்முகநாதக் குருக்கள் ஆசியுரை நிகழ்ந்த பின் பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை வரவேற்புரையும் தலைவர் நம. சிவப்பிரகாசம் அவர்களின் உரையும் இடம்பெறுகின்றன.

ஒப்பியல் அரங்கு, பண்டிதர் இ நமசிவாயம் (சமாதான நீதிபதி) தலைமையில் முற்பகல் 10 மணிக்குத் தொடங்கும். கச்சியப்பருடன் மணிவாசகர், சேக்கிழார் அருணகிரிநாதர் மூவரையும் தொடர்புபடுத்தும் கருத்துகள் முறையே திரு. ச. விநாயகமூர்த்தி B. A. திரு. க. உமாமகேஸ்வரம் பிள்ளை, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வழங்குவர்.

தத்துவ அரங்கு பேராசிரியர் சிவஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் M. A PhD. தலைமையில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்.

கச்சியப்பா காட்டும் மாயை திருவருள். மலபரிபாகம் என்ற பொருட்களில் முறையே பிரமஸ்ரீ ப. கோபால கிருஷ்ணன் B A. திரு சோ. பத்மநாதன் திரு. க. சொக்கலிங்கம் M. A ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். சிவஸ்ரீ நா சுப்பிரமணியம M. A. அவர்கள தொகுப்புரை செய்த பின் முத்தமிழ் அரங்கில் முத்தமிழ்விரவிய நற்றமிழக் கோவை கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை பி. ஏ. அவர்கள் தயாரிப்பாக நிகழ்ச்சி நடைபெறும். வரவேற்புரை திரு. பொன் சோமசுந்தரம் பி. ஏ. நன்றியுரை திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தன் பி.ஏ திரு. இராஜ. சண்முகரத்தினம் பி. ஏ. செய்வார்கள்.

## குருத்துவத்துக்குத் தூண்டாமணி விளக்கான அந்தணக் குரவர்

### 'பிரதிஷ்டா பூஷணம்' சிவத்திரு. ஐ. கைலாசநாதக்குருக்களின் பிரிவு

வேதமோதும் வேதியர்கள் மாதம் மும் மாரி பொழிவதற்கேதுவாகும் ஆற்றல் உள்ளவர்கள். கற்புக் கரசிகளின் பொற்பும் மாரி வளத்துக்கு நற்றுணையாகும் என்பர். அந்தக் கற்பார் தகைமை அந்தணர்களிடத்தும் இருத்தல் வேண்டும். ஆகையினாற் போலும் சொற்றிறம்பாப் பொற் கொடியாரும் வேத மந்திரச் சொற்றிறம்பா முப்புரி நூன் மார்பரும் அரிவதியற்றும் பெருமையுடையோர் என்று புலவர்கள் புகழ்வது.

திருமேனி ஒருபொழுதல்ல முப்பொழுதும் தீண்டுஞ் சிலர்களின் பெருமையை எடுத்துரைப்ப தெளிதாகாது. அவர்களிலும் அறிவிற் சிறந்து சிவநெறியிற் பொலிந்து வேதாகம விற்பன்னர்களாக விளங்குவார் பெற்றியைக் கூறுவதும் சலபமல்ல, அத்தகையினோருள்ளும் உத்தமராய் ஆலயக்கருமங்கள் யாவற்றுக்கும் இவரே சாலச் சிறந்தவரென்று சைவ உலகம் ஏகோபித்து ஏற்றும் ஒருவரின் அருமையை வரைவது சிரமமே.

குருத்துவப் பேற்றிலே தனி ஒருவராக ஆண்டுகள் பலவாக இந் நாட்டிலும், பாரதப் பொன்னாட்டிலும் சிங்கை நாடு மலேசிய நாடு போன்ற அன்னிய இடங்களிலும் வித்தக உத்தமராகப் போற்றப்பட்ட அமரர் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள் அவர்களைப் பற்றி உரைகளின் ஒரு தனி நூல் உருவாகும்.

கொடியேற்றம் என்ற சிவ கருமத்தின் அடிப்படைத் தத்துவம் அனைத்தையும் அடக்கி ஆசாரியராய் எங்கள் நயினைக் குருமணி பணி செய்யும் பொழுது கண்ணிமை கொட்டாமல் காது வேறொன்றும் கேளாது நின்று ஆயிரக் கணக்கான அடியார்கள் பேரின்பத்தை நுகர்வதை யாவரும் அறிவர்.

கும்பாபிடேகம், சங்காபிடேகம், பிரதிட்டை என்ற விசேட நியமங்கள் எங்கள் குருமணியவர்கள் ஆசாரியராய் அமையும்போது அதி உன்னத மதிப்பை அளிப்பதையும் அடியார்கள் அநுபவித்திருக்கின்றனர்.

( வளர்ச்சி 3-ம் பக்கம் )

உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

காலயுத்தி ௵ தை — மாசி ௴
( 9-2-79 ) வெள்ளிக்கிழமை

## பன்னலம் பயக்கும் தென்னையைப் பேணுவம்

ஈசனுக்குப் பூசனை செய்யப் பொருள் வளம் வேண்டும். அவ்வளத்துக்கு இன்றியமையாதது தென்னை எனப் பலமுறை எடுத்துக்காட்டியிருக்கின்றோம். அவ்வாறே தாவரங்கள் பலவுள. அவற்றுள் அதிமுக்கியமானது தெங்கு. இந்நாட்டில் மிக இலகுவாக மலிந்த விலைக்குக் கிடைக்கக்கூடியதாக இருந்த தேங்காயும் அதன் நெய்யும் இப்பொழுது அரிதாகிவிட்டன. பதினைந்து ஆண்டுகளுக்குள் விலையேற்றம் பதினைந்து மடங்காகி விட்டதென்றால் காலப்போக்கிலே தங்கக்காசு போல இதன் பெறுமதி உயர்ந்துவிடும் போலிருக்கின்றது. இந்த விதமாகக் கணக்கின்றி விலையுயர்ச்சி நிகழ்வதற்கு காரணம் புறநாட்டார் இந்நாட்டுத் தென்னம் பொருட்களை அதிகமாகப் பெற்றுக் கொள்வதே. ஏனைய காரணங்களில் ஒன்று, தென்னையை வளர்க்கவேண்டிய அவசியத்தை மக்கள் பொருட்படுத்தாது விடுத்ததெனலாம்.

தென்னந் தோட்டங்களைப் பேணுவது பயிர்ச் செய்கையாளரின் தலையாய பணியாயுள்ளது. இல்லாளனுக்கும் தென்னை முக்கியமான பயிர் ஆகையால் அதனைப் பயன்படுத்தும் வழிவகைகளை அறிந்து கவனம் எடுப்பது இல்லறக் கடமையாகின்றது.

இளநீர், தேங்காய், தேங்காய் நெய் இம் மூன்றும் சமயநெறி அனுட்டானக் கடமைக்கு வேண்டிய பொருட்கள். இவற்றைப் பெருவிலைக்குப் பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதால் அவற்றை உபயோகிக்காது விடும் நிர்ப்பந்தமும் உண்டாகின்றது. ஆனால் இறை பணியிற் குறைவு இருப்பது குற்றம் அல்லவா? எனவே இல்லங்களில் எல்லாம் தென்னையை வளர்ப்பது ஒவ்வொருவரின் பொறுப்பாகின்றது. ஐந்து தென்னைகள் நீர்நிலைக்கு அணித்தாக வளர்க்கப்பட்டால் ஒவ்வொரு குடும்பமும் முறையாக இறை பணியை ஆற்றுவதுடன் தங்களுக்குரிய தேவைகளையும் நிறைவுசெய்வது சுலபமாயிருக்கும். அவ்வாறன்றி அத்தியாவசியமான பொருட்கள் யாவற்றையும் விலைக்குப் பெறுவதென்றால் வீணாகப் பணம் விரையமாவதுடன் பாடுபடாதவர்களே கொள்ளை இலாபத்தை அநுபவிக்கக்கூடிய நிலைமை உண்டாவதாயிருக்குமல்லவா?

இல்லறம் என்பது தான் மட்டும் வாழ்வதல்ல. வள்ளுவநாயனார் இல்வாழ்க்கையின் இலக்கணத்தையும் இலட்சியத்தையும் எடுத்துரைத்திருக்கின்றனர், நெறி தவறாது இல்லறம் ஆற்றுபவன் சமயியாக இருத்தல் வேண்டும்.

எனவே இல்லறத்தைப் பேணுவது மக்கள் கடமை. அதனைப் பேணுவதற்கு நல்லவழியை நம் முன்னோர் காட்டியிருக்கின்றனர். அவ்வாறு ஒழுகின் பொருள்வளம் பெருகும். ஒரு பொழுதாவது இல்வாழ்வான் தென்னையை மறந்து வாழ முடியுமா?

தெங்கந் தீவு என்று சப்த தீவுகளில் ஒன்றுக்குப் பெயருண்டு. அங்கு ஆங்கு தெங்கு வளம்பொருந்தி இருந்திருக்க வேண்டும். மக்கள் வாழ்க்கைச் செலவு மிக்கதென்று சொல்லுவதிற் பயனில்லை. அதற்கு ஈடாக இயற்கையின் துணையுடன் பொருள் வளத்தைப் பெருக்கப் பெரிதும் முயற்சி செய்தல் வேண்டும். எனவே தெங்கிலும் எங்கள் வாழ்க்கை தங்கியிருக்கின்றது என்பதை உணர்ந்து அதனைப் பயன்படுத்துவோமாக.

# நாடறிந்த சிவஞானி நயினைக் குருமாமணி

## நாயன்மார்கட்டில் நினைவு அஞ்சலி

"பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் ஈழத்திற்கே என்று சிறப்பாக வந்துதித்து "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற நினைப்புடன் விளங்கியவர்கள். யாவும் திருவருளே நடாத்துகின்றது என்ற தூய சிந்தனையுடன் திருவருட்பணிகளை ஆரம்பிப்பவர்கள "நான்", "எனது" எனும் செருக்கற்றவர்கள். எம்பெருமானும் நம் இறைவன் எவ்வாறு உலக மக்களிடம் அன்பு கொண்டுள்ளாரோ அதே போன்று இவரும் கற்றோர், மற்றோர் யாவருடனும் மிக்க அன்பாகப் பழகுபவர். குரு பரம்பரைக்கே ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்கள்".

ஆகமங்களில் கூறப்பட்டிருக்கும் கடினமான கிரியைகளையெல்லாம் ஆர்வத்தோடு — மன எழுச்சியோடு — அன்போடு செய்வார். இலங்கையில் உள்ள பெரும்பாலான ஆலயங்களிலெல்லாம் இவரே கும்பாபிஷேகக்கிரியையை நடத்திவைத்தார்கள். அவர் செல்லாத கிராமங்கள் அதிகம் இருக்காதெனலாம்.

நல்லூர்க் கந்தன் ஆலயத்திலே அவர் செய்த தொண்டு அளப்பரியது. அவர் குரு பரம்பரைக்கே ஓர் "குருமணி"யாகப் பிரகாசித்தவர் — இனியும் பிரகாசிப்பார். அவர் கோயிற் கிரியைகளில் அதிலும் முக்கியமாக சங்காபிஷேகம் யாகம் போன்றன செய்யும் கிரியா முறைகளை விபரமாக விளக்கும் அரிய நூலை எழுதி வெளியிட்டிருக்கிறார், அந் நூலைத் தாமில்லாக் காலத்தும் அக் கிரியை முறைகளைப்பற்றிக் கற்போரும் மற்றோரும் மேலும் விபரங்களை அறிந்து முறைப்படி கிரியைகள் நிறைவு பெற வேண்டும் எனும் நன்நோக்குடன் வெளியிட்டிருக்கின்றார். அவர் சிவபேறடைந்துவிட்டாரெனினும், அவர் பிரிந்துவிட்டாரே என்று கவலையடைய வேண்டியதில்லை. ஏனெனில் அவர் இறைவனிடமும் மக்களிடமும் அன்பாக இருந்தார். அந்த ஆரா அன்பனை இறைவன் தம்முடன் சேர்த்துக்கொண்டார், அவர் வாடாமலராக யாவரிடமும் நிறைந்திருக்கிறார். இனி அவருக்கு ஜன்மப் பேறில்லை' அவர் ஒரு கர்மவீரர் இவ்வாறாக ஈழத் திருநாட்டிற்கே ஒரு ஞானச் செல்வராக குருபரம்பரைக்கே குருமாமணியாகத் திகழ்ந்த சிவச் செல்வரைத் தமிழுலகம் ஒருபோதும் மறவாது",

இவ்வாறு பிரதிஷ்டா பூஷணம், அகில இலங்கை இந்து மதபீடாதிபதி நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்களது ஆத்ம அஞ்சலிப் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து அருள் உரை வழங்கிய நல்லூர் சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

யாழ் நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழக ஆதரவில் நாயன்மார்கட்டு அருள்மிகு இராஜராஜேஸ்வரி பேய்ச்சியம்பாள் கோவில் மகா மண்டபத்தில் இவ்விழா நிகழ்ந்தது.

அடுத்து மாந்திரீக பூஷணம் சிவஸ்ரீ க. சாமபசிவக்குருக்கள் அருளுரை வழங்குகையிற் கூறியதாவது:—

"ஈழ சிம்மம்" - நம் நயினைக் குருமாமணி சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் சைவத்துக்கும் தமிழுக்கும் கண்ணுள் மணி போன்று, தாய் நாட்டிலும் சேய் நாட்டிலும், கடல்கடந்து மலேசியா சிங்காபுரி முதலாம் இடங்களிலும் உலகறியப் பணிபுரிந்து பேராம் கும்பாபிஷேகங்களைச் செய்து அனைவராலும் பாராட்டப் பெற்றவர். பற்றற்று சிவகைங்கரியமாகிய பிரதிஷ்டாக் கிரியைகளைத் திருந்தப் பணி புரிந்த கர்மவீரர்.

வாழ்வு என்பது சந்தர்ப்பங்களின் கோவை. கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, எவ்வளவு தூரம் சாத்தியப்படுமோ அவ்வளவு தூரம் பயன்படுத்தி பணிபுரியும் பான்மையில் சாதித்தவீரர் நம் நயினைக் குருமணி. 'இறை பணி நின்றார் —காலவிடையார்' எனப்பலர் நிரூபித்த முனிவர் நம் நயினைக் குருமணி. கடமை தவறாத கர்மயோகியாய் கருமமே கண்ணாய் கடைசி மூச்சுவரை அயராது தயங்காது தொண்டாற்றிய உத்தம புருஷர் அவர். அன்னார் பொலிவுறு மேனியும், புன்சிரிப்பும் அமைதி நிறை தோற்றமும், அஞ்சாத பாவமும், தெளிவான நகைச்சுவைப் பேச்சும் பாண்டித்தியமும் எம்மனோர் காதுகளில் இனி எப்போது ஒலிக்குமோ என எண்ண ஏங்குதும் யாமே' என்று கூறி. மேலும் வேத மந்திரங்களை அன்புடன் கொண்டு ஓதிய மன்னு! நயினை நாகபூஷணி வேத வயலில் விளைந்த விளைவே! எமக்கு மெய்ஞ்ஞான அருள் புரிந்து எஞ்ஞான்றும் வாழுதியே சிவ சந்நிதியில் என்று அஞ்சலி செலுத்தினர்,

கழக உபதலைவர் பேசுகையில் நயினைக் குருமணி அவர்களுக்கு நிகர் அவரே' என்று கூறி, வடமொழியையும் தென் தமிழையும் ஒருசேர நேசித்த குருமணி அவர்கள், திருமுறைகளில் மிக்க ஈடுபாடு கொண்டமையால் அந்நெறி நிற்போரை மதித்து வந்தார்கள் என்றார்,

குருமாமணியின் திருப்படத்துக்கு ஆலய அர்ச்சகர் ஸ்ரீ செ. தர்மலிங்கம் ஐயா பூசை ஆராதனைகளை நடாத்திவைத்தார். அன்பர்கள் பெருந்தொகையில் சூழ்ந்து புஷ்பாஞ்சலி செய்து பக்தி சிரத்தையுடன் குருவழிபாடாற்றினர்.

— தொகுப்பு : - "மல்லிகை"

# விண்வெளியில் வேதம் விளம்புகிறார்

"இறை — ஒளி"

நயனநெற்றி நாதனிடம் நாகபூஷ ணித்தாய்
நயினையிலே வீற்றிருக்க நாளும் — பயிலநின்ற
வேத சிவாகம வித்தகர் கைலாச
நாதக் குருவெங்கே? நாடு!

நாடுவதென்! நாகம்மை நாதனடி நண்ணியங்கு
கூடுதிருக் கோயிற் கொடியேற்றம் — பீடுபெற
விண்வெளியில வேதம் விளம்புகின்றார். வேறென்ன!
கண்ணுதலான் நாடகமே, காண்,

## திருக்கோயிலிற் ..

1-ம் பக்கத்து வளர்ச்சி

பெற்று அடியார்களின் பெரு மதிப்பைப் பெறும் வகையில் ஈடுபட்டு வருகின்றனர்,

புனர் உத்தாரணம் செய்யப்பட்ட இக்கோவிலிலே பலவேலைகள் நிகழவேண்டியிருந்தன, அவற்றுக்கெல்லாம் இந்த இளைஞர்களே பொறுப்பை ஏற்றுப் பொறுமையுடன் பணி புரிந்து கோவிலின் தோற்றத்தைப் புனிதப்படுத்தியிருக்கின்றனர்,

அயராதுழைக்கும் இந்த இளைஞர்கள் சித்திரத் தேர்த் திருப்பணியோடு சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு உறுதுணையாயிருந்தனர்.

இவற்றுக்கெல்லாம் மேலாக இப்பொழுது இக்கோயிலுக்கு இராசகோபுரம் அமைக்கும் திருப்பணியில் ஆரம்பக் கருமமான அத்திபாரத்துக்குரிய பாரிய தொண்டினை யாவரும் பிரமிக்கத்தக்க வகையிற் சீராகச் செய்து முடித்ததைப் பாராட்டாதார் இல்லை.

கூலிக்கமர்த்தி வேலை செய்வித்தாலும் இந்த இராச கோபுரத்துக்குரிய அத்திபாரத்து மண் எடுக்கும் வேலை மூன்று வாரங்கள் எடுக்கும். ரூபா ஐயாயிரம் செலவாயிருக்கும். இந்தத் தொண்டினை மகிழ்ச்சியுடன் வேண்டி ஏற்றுக்கொண்ட இந்த இளைஞர்கள் பதினெட்டு நாள்களுக்குள் அவ் வேலையைச் செய்து முடிக்கும் நிபந்தனைப்படி காலை, கடும்பகல், மாலை இரவு என்று எல்லா நேரங்களிலும் பழகிய தொழிலாளர் போன்று செய்து வந்தனர். இவர்கள் உச்சி வேளையில் உடம்பெலாம் வியர்த்து வடிய அச்சமின்றி வாடாத முகப் பொலிவுடன் மூன்று வாரந் தொடர்ச்சியாகச் செய்து வந்ததைக் கண்ணால் நோக்கியவர்கள் கண்களிற் கருணை நீர் பொழிந்தமையே சிரமதானத்தின் சிறப்பை விளக்குவதாயிருக்கும்.

எட்டடி மண் வெட்டி முடிந்ததும் தொட்டது கற்பாறை. தொழிலாளிகளோ இதைக் கண்டதும் மனங் களைத்து அதனைத் தகர்க்க வெடி மருந்தைத் தேடுவர், ஆனால் இந்த இளைஞர்களோ எந்த இடுக்கணையும் சந்திக்கத் தயாராகி நின்றனர். காரணம் துர்க்கையன்னையின்மீது ஆணை இட்டமையால். வீரத்தாய் அல்லவா துர்க்கை. தேவியின் அடியார்களும் வீரப் பிள்ளைகளாவது வியப்பா? பெரியவேலை, அரிய வேலை, ஆனால் சிரமதானத்தாற் செய்யப்பட்ட வேலை; குறிப்பிட்ட நாளிலே கொடுக்கப்பட்ட வேலையைச் செய்து முடித்தனர் சிறுவர் சகோதரினர். சிறு பிள்ளை வேளாண்மை (துர்க்கை) வீடு வந்து சேர்ந்தது.

அத்திபாரக் கிரியைகளைக் கண்ணுற்ற ஆயிரக் கணக்கான அடியார்கள் இராச கோபுர ஆரம்ப வேலையை அன்னையின் பிள்ளைகள் செய்து முடித்தனர் என நேரே கண்டு அகமகிழ்ந்தனர்.

நிருவாக சபையின் தலைவர் "துர்க்கா துரந்தரி" செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இந்த இளைஞர் இயக்கம் திருப்பணியின் ஒரு பெரு அங்கமாக அமையப் பல வழியிலும் உரிமையுடையதாய் விட்டதென்று பாராட்டிப் புகழ்ந்தனர்.

உபதலைவர் நம. சிவப்பிரகாசம் அவர்கள் இந்தப் பெரும் பணியில் ஈடுபட்ட அத்தனை இளைஞர்களுக்கும் சிரமதான சிரே

(வளர்ச்சி 3 ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணியநாச்சி அம்மை தினம்

## 19 — 2 — 79

திருவருளை முன்னிட்டு ஸ்ரீமதி புண்ணியநாச்சி அம்மையார் நினைவு தினம் நிகழும் காலயுத்தி வருடம் மாசி மாதம் 7ம் திகதி (19—2—79) திங்கட்கிழமை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் ஆதரவில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

### காலை நிகழ்ச்சிகள்

9-00 மணி: ஆரம்பம்
- சிவபூஜா மண்டபத்தில் சிவபூஜை
- நாவலர் மண்டபம் விசேட பூஜை
- கோவிற் புராண படனம்
- வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் ஸ்ரீமதி புண்ணியநாச்சி அம்மையார் பெயரில் அபிஷேகம்
- மாகேசுர பூஜை

### மாலை நிகழ்ச்சிகள்

தலைவர் : திரு. ச. செல்வராசா அவர்கள்
(தலைவர், சைவ பரிபாலன சபை)

4-00 மணி: தலைவர் ஆரம்பித்து வைத்தல்
4-30 மணி: தமிழ்மறை ஓதல்
— சபையாரது தேவார வகுப்பு மாணவர்கள்
5-00 மணி: பண்ணிசை நிகழ்ச்சி
— பண்ணிசைத் தேர்வில் சித்தி பெற்றோர்
5-30 மணி: பண்ணிசைப் போட்டிப் பரிசு வழங்கல்
திரு. K. V. நவரத்தினம் அவர்கள் (முன்னாள் யாழ்ப்பாண நீதவான்)
6-30 மணி: ஆசியுரை
— ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
7-00 மணி: ''சைவமும் மாணவரும்''
— செல்வி புஷ்பா செல்வநாயகம் B.A. அவர்கள்
(ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி)
7-30 மணி: ''புண்ணியநாச்சி அம்மையின் உளப்பண்பு''
— திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள்
(பத்திராதிபர் — இந்துசாதனம்)
8-00 மணி: நன்றியுரை

அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மு. மயில்வாகனம்
சமயப் பிரசார அமைச்சர்

இராஜ இராஜேஸ்வரன் தங்கராஜா
மயில். அமிர்தலிங்கம்
கௌரவ உதவிக் காரியதரிசிகள்

சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம். 6-2-79

## குருத்துவத்துக்குத் தூண்டாமணி...

(1-ஆம் பக்கத்து வளர்ச்சி)

சைவ மாநாடுகள், கருத்தரங்குகள் முதலியவற்றிலே கலந்துகொள்ளும் சிவப்பிராமணர்கள் எண்மிகக் குறைவு. ஆனால் அந்தச் சின்னஞ்சிறு குழுவிலே முன்னணியில் நின்றவர் எங்கள் குருக்கள் சுருக்கமாகப் பொருள் பெருக்கமாக உரைத்து அவையை மகிழ்விப்பர்.

நயினை நாகபூஷணியம்மை அலங்கவைத்த வேத சிவாகமப் பயிராகிய அந்தணோத்தமர் கைலாசநாதக் குருக்கள் சைவங்கமழும் தேசமெங்குமுள்ள ஆலயங்களிலே தனது சிவக் கதிரைச் செறிய வைத்தமை அப்பெரியாரின் வாழ்வு பயனுடைத்தென்பதைப் புலப்படுத்தும்.

பூணூற் பொலிவு மட்டும் போதும் என்று அமையும் அந்தணர்கள் பலர் பிறப்பாற் பிராமணராம பேருடன் இருப்பவர்கள் பலர். ஆனால் இவர்கள் வருணாச்சிரம தரும நியமத்தில் உயர்ந்தோராய் விளங்குவதே அவர்களுக்குரிய இலக்கணமாகும்.

ஐயரென்றும், வேதியர் என்றும், நூலோர் என்றும ஆறுதொழில் மேவுவோர் என்றும ஆய்ந்தோர் என்றும், பூசுரர் என்றும தீ வளர்ப்போர் என்றும் தொழுகுலத்தோர் என்றும் அந்தணர் என்றும் ஆதி வருணர். என்றும் முப்புரி நூன் மார்பர் என்றும மெய்யர் என்றும் விபரர் என்றும் வேத பாரகர் என்றும் வேள்வியாளரென்றும் மறையவர் என்றும் இருபிறப்பாளர் என்றும் பார்ப்பார் என்றும் மேற்குலர் என்றும் உயர்ந்தோரென்றும் இவர்களுக்கு நாமங்கள் பல வேறுள்ளன, இந்தப் பெயர்களின் குறிக்கோள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெறுபவரே அந்தணர் ஆவர். அந்நிலையில் விருந்தாலன்றி வள்ளுவர் வாய்மொழிபோல் மற்றெவ்வுயிர்க்கும் இவர்கள் செந்தண்மை பூண்டொழுகல் இயலாது. இந்த இலக்கணத்தின்பாற்பட்டு அந்த இலட்சியத்தைக் குறியாகக் கொண்டு எந்த வகையிலும் இவர் அந்தணர் என்று அனைத்துலகும் நனி பாராட்ட வாழ்ந்த — சைவ மக்களை வாழ வைத்த அமரர் கைலாசநாதக் குருக்கள் கைலாசநாதனின் மெய்யடி மெய்தி உய்தியடைந்துவிட்டார்.

## சிவராத்திரி வழிபாடு

### தெல்லிநகர் துர்க்கை கோயிலில்

வழமைபோலத் தெல்லிப்பளை துர்க்கை கோயிலிலே சிவராத்திரி விரதம் மிக ஒழுங்காக நிகழ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இரவு முழுவதும் திருமுறை ஓதலும், புராணப்பகுதிகள் படனம் செய்தலும், அபிடேகங்களும் நிகழும்

### மானிநகர் வேலக்கைப் பிள்ளையார் ஆலயம்

இங்கு விசேட பூசைகள் சிறப்புச் சொற்பொழிவுகள் திருமுறை ஓதுதல் நிகழ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன

### நாவல் நகரில் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்
(நாவலப்பிட்டி)

25-2-79 ஞாயிற்றுக்கிழமை இரவு நான்கு யாமங்களும் ஆத்மஜோதி நிலைய உபயமாகச் சிவராத்திரி விழா நிகழவிருக்கின்றது.

## திருக்கோயிலிற் ....

(2-ம் பக்கத்து வளர்ச்சி)

ட்டத் தராதரப் பத்திரம் வழங்கப்படுதல் வேண்டுமென்று குறிப்பிட்டனர்.

இந்த இந்து இளைஞர் சங்கம்போன்று எல்லாக் கோயில்களிலும் சங்கங்கள் நிறுவப்படுதலும் இவ்வகையிற் றொண்டாற்றுதலும் நடைபெற இது ஒரு எடுத்துக்காட்டாக அமைதலை யாவரும் எதிர்பார்க்கின்றனர்,

வெண் பொன்னில் இந்தச் சிரமதானம ஐயாயிரம் பெறுமதி ஆனால் சிரமஞ் செய்யப்பட்ட அன்புயர்ச்சியும் பொன்னாலும் ஈடுக்கவமையா.

## நூற்றாண்டு விழாவை நோக்கும் இந்துசாதனம்

இன்னமும் ஒன்பதாண்டுகளே இருக்கின்றன, இந்துசாதன நூற்றாண்டு விழாவுக்கு

ஆயிரத்தெண்ணூற்றுத் தொண்ணூற்றொன்பதாம் ஆண்டில் ஆரம்பித்த இந்துசாதனம் தொண்ணூற்றோராம் ஆண்டிலே சென்றுகொண்டிருக்கின்றது. இந்த மாபெரும் பேற்றைக் கண்ணியப்படுத்தும் முகமாக இன்னும் இரண்டு திங்களிலே பக்கங்கள் பல அமைந்த விசேட இதழ் வெளியாக இருப்பதனாலும் அதற்குரிய ஆரம்ப வேலைகள் நடைபெறுவதனாலும் இந்துசாதனம் திகதி பிந்தி வர வேண்டி நிகழ்ந்துவிட்டது. ஆகையால் இந்த இதழ் 2?- -79, 2-?-79, 9-?-79 ஆகிய மூன்று திகதிகளுக்குப் பொதுவாகவும் அடுத்த இதழ் 16-?-79, 23-2 79 ஆகிய திகதிகளுக்குப் பொதுவாகவும் வெளிப்படுத்துகின்றோம்;

அதிபர்

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல : 13461 / ஈடு

1. கந்தையா பூலோகநாதனும்.
2. பெண் கனகம்மாவும் கம்பர்மலை உடுப்பிட்டி — வழக்காளிகள்

எதிராக

1. சின்னத்தம்பி தாமோதரம்பிள்ளையும்
2. பெண் பொன்னம்மாவும், வீரபத்திர கோவிலடி உடுப்பிட்டி — எதிராளிகள்

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட [Reissue] கொமிஷன் அதிகாரப்படியும இதன்கீழ விபரிக்கப்படும் ஆதனம் 1979 ம் ஆண்டு பங்குனி மாதம் 14 ந் திகதி (14-3-1979) புதன்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் குறித்த காணியில் வின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

[கோட்டால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா 9,500/—]

### தீர்வைத் தொகை

ரூபா 5715/- உம் மேலும் ரூபா 3,000/-க்கு 6-4-76 தொடககம் 13-8-76 வரை 12 வீத வட்டியும் (வருஷம் ஒன்றுக்கு) பின் விற்பனவுத் திகதி வரை வருஷம் ஒன்றுக்கு 9 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 250/- உம்.

(இதில் ரூபா 1,200/- கட்டப்பட்டுள்ளது)

### ஆதன இடாப்பு

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று, உடுப்பிட்டி குறிச்சியிறை "தில்லாவளை" நி பர. 33 இதில் மேற்குப் புறமாக நிந்தமான 2/3 பங்குக்கு உலாந்தா மேஸ்தர் வே. சிவரத்தினம அவர்களால் 4-5-1959 ம் திகதி 1960-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நி பர 20 குளி 5 11/32. இது குறித்த உலாந்தாவால் 11-4-1964 ம் திகதி 2353 ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி 1 தொடக்கம் 4 வரைக்குமுள்ள துண்டுகள் குறித்த படத்தில் 1 ம் இலக்கத் துண்டுக்கு நில பர 4 குளி 11, 13/32. இதற்கெல்லை கிழக்கு செல்லத்துரை பெண் அன்னம்மாவுக்குரிய ஆதனம, வடக்கு சின்னத்தம்பி வயிரமுத்து பெண் பாக்கியத்துக்கும் மறு பேருக்குமுரியவாதனமும் ஒழுங்கை முடிப்பும். மேற்கு ஒழுங்கை, தெற்கு கிட்டிணர் பெண் செலலமமாவுக்குரிய ஆதனம், இவ் வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், கிணறு, வீடு, கொட்டில் அடங்கலும் கிழக்கு, வடக்கு, மேற்கு வேலிகளின் உரித்துக்களும், தெற்கு வேலியில கிழக்கரைவாசியுரித்தும்.

இ. வேலுப்பிள்ளை, J. P.
[ஏலதாரர், நீதிமன்ற விற்பனவு ஆணையாளர், விலை மதிப்பாளர்]

"கெக்சர் வாசம்"
வல்வெட்டித்துறை.
30-1-1979

எம் 166 31—1—79.

## சைவப் பணி பல ஆற்றிய நல்லார்

வானொலி வழியாகச் சமய அறிவு பரப்புவதற்குரிய நெறியிலே அந்த அலுவலகத்திலே பணியாற்றியவரும கொழும்பு விவேகாநந்த சபை, திருக்கேதீச்சரப் புனருத்தாரணசபை, யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை இந்து மாமன்றம் ஆகியவற்றில் நிருவாக சபை அங்கத்தவராகவும் நற்றொண்டாற்றியவரும் சைவப் பணியில் ஆர்வம் உள்ளவருமான திரு. அருள் தியாகராசா அவர்கள் இவ்வுலக வாழ்வு நீத்தமை சைவ மக்களுக்குப் பெரிய துயரத்தைக் கொடுக்கின்றது.

வானொலித் தமிழ்ப் பகுதி உயர் பதவியிலிருந்து அரும்பணியாற்றி எல்லோரதும் மதிப்பைப்பெற்ற திரு. அருள் தியாகராசா ஆலயங்களில் விசேட நிகழ்ச்சிகளை வானொலி வாயிலாகப் பரப்புவதற்குப் பெருந்துணையாயிருந்தனர், உத்தியோக ஓய்வு பெற்ற பின் சைவத் தொண்டிலேயே தனது காலத்தைக் கழித்து வந்தனர்.

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் சிலை நிறுவுவதற்குப் பெரிதும உழைத்தவர் இவரென்பது குறிப்பிடத் தக்கது.

நடைமெலிந் தேர் தள்ளினும் நண்ணுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hindu Organ

Friday, January, 29, 1979

## DUTY FIRST DEMANDS LATER

The lunar month that is governed by the Zodiacal sign of Aquarius is significant in several respects, one of which is the occurrence of the Gurupoojah of Saint Thiruvalluvar. No occasion is more appropriate than the day of this Gurupoojah to understand the true import of what is commonly called duty.

What one is bound or ought to do as a moral or legal obligation has been referred to as one's duty. In other words it is the binding force of what is right.

Thirukural, the most comprehensive and scholarly work on the code of conduct of human beings, has been universally accepted as scriptural in its application to life. That is why the Kural stands quoted by preachers, teachers, authors, statesmen legislators and all others including politicians. It may be that the politician like the devil quotes this valuable work to suit his purpose.

The codification of the duties of mankind in Thirukural is so perfect that it would be hardly possible for any individual to satisfy all the requirements mentioned there in. In fact such a consummation cannot be presumed except in the case of those who are on the path to perfection

But it will not be an impossible task for the elementary requirements of a dutiful life to be observed. If only every person would do his duty there would be none left with any grievance. The individual owes a duty to all others; these others are themselves governed by this obligation.

Hence it would be proper for us to suggest that the observance of the Thiruvalluvar Gurupoojah should take the form of comprehending the code of conduct as clarified in the Kural and

## THIRUKURAL AS GUIDE TO LEGISLATORS

At a time when there is growing tension and brewing unrest in almost every country mainly due to confused thinking in the context of politics, the weighty words of wisdom of Saint Thiruvalluvar are worth being learnt, understood and translated into practice

The saintly author of Thirukural in the second volume of his momentous work under caption Porudpal approaches the theme of the magnanimity of a ruler in a very instructive manner. Defining the comprehensive term "அரசு" Kingdom, of olden days, state of the present time, says the inspired Poet

"அறனிழுக்கா நல்லவை நீக்கி. மறனிழுக்கா
மானம் உடைய தரசு"

The central spot in this poetic gem is the ideal of Dharma. And we nowadays hear endless repetition of the determination of the rulers of this country to establish a Dharmmistic State

Thiruvalluvar requires the ruler to be rigidly disciplined in Dharma and cautions him not to falter or fail in this moral exercise, The example of ethical purity should be set by the Ruler by strict adherence to the ideal of Dharma,

not the vociferous demonstrations and verbose utterances.

The Thirukural Tenets which are in essence the lofty thoughts of a great ascetic, prescribe what mankind should do and what should be avoided

The teachings have a positive and a negative approach, both pertaining to the sacredness of life and portray Tamil Culture in its true perspective.

The Tamil - speaking people of this world owe a duty to Saint Thiruvalluvar; it is their adherence to the code of conduct so methodically and meticulously formulated in the form of axioms and maxims on the basis of logical inferences. Of the three-fold aspects that form the entire Kural, the one that relates to Dharma would be suffice for any one to comprehend the true significance of duty.

To the tub - thumping orators who day in and day out take pleasure in quoting Thiruvalluvar and Navalar we only say; why do you not show your appreciation of these. Teachers by you, yourselves conforming to their code of conduct. This world will be as it ought to be if only all of us learn the Kural, comprehend its teachings and lead our lives in conformity with the tenets of this book of universal utility.

And who is the Ruler in the modern State? Universal adult franchise, as the means of determining the choice of the ruler, vests sovereignty in the elected representatives who in turn delegate the power to the single person who leads them all. The rule of Dharma includes the Rule of Law. In other words law is a weapon of Dharma.

Had Dicey, Laski and other experts on Constitutional Law read the Thirukural their enunciation of sovereignty would have been more explicit and answering to all aspects.

Thiruvalluvar while stressing the need for the ruler's conformity to the concept of Dharma warns him against injustice also pointing out the observance of decorum in the use of military power.

Having pictured the ideal ruler in this Kural the gifted author goes on to describe the supplementary qualities that should mark the successful administrator,

இயற்றலும் ஈட்டலும் காத்தலும்
காத்த
வகுத்தலும் வல்ல தரசு

He who has the capacity to create the economy of the land by developing its resources, to reap the benifits of such efforts, to preserve the products and to disburse it equitably, will certainly become a competent ruler. In this couplet the Divine Bard has expounded the theory of national economy

ட

சிவமயம்

சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்.

## மகா சிவராத்திரி வழிபாடு

திருவருளை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆதரவில், சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நிகழும் காலயுத்தி ஞு மாசி மீ 13-ம் நாள் ( 25-2-79 ) ஞாயிற்றுக்கிழமை மகா சிவராத்திரி வழிபாடு நடைபெறும்.

### நிகழ்ச்சிகள்

1. சிவபூஜா மண்டபத்தில் சிவபூஜை
2. நாவலர் மண்டபத்தில் நான்கு யாமப் பூஜை
3. இரவு 10-00 மணி : சொற்பொழிவு

"ஒன்பதும் - ஒன்றும்"

— திரு ப. கணபதிப்பிள்ளை அவர்கள்

(ஆசிரியர், மங்கையர்க்கரசி வித்தியாசாலை, நல்லூர்)

4. இரவு 11-00 மணி : திருமுறை ஓதல்

(யாழ். சைவ சமய அபிவிருத்திக் கழகம், நாயன்மார்கட்டு)

5. அதிகாலை 1-00 மணி : சொற்பொழிவு

"ஐம்புலன் அடக்கும் அருந்தவம் முயல்வோம்"

— திரு: கு. துரைராசா அவர்கள்

( யா. சை. ச. அ. கழகம், நாயன்மார்கட்டு )

"சிவராத்திரி மகிமை"

— திரு. சே. க. சண்முகம்பிள்ளை அவர்கள்

6. அதிகாலை 3-00 மணி : புராண படனம்

கந்தபுராணம் — அடிமுடிதேடு படலம்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப் பிரசார அமைச்சர்

சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம். 20-2-79

*Letter to the Editor*

## Sri S. Natesan Avergal

A thoughtful and beautiful article of appreciation of the life of the above named eminent personality which appeared in a recent issue of the Hindu Organ was read with sentiments of very great pleasure and gratitude — Mr. S. Natesan was a rare person, the like of whom one does not come across often. His services, in many walks of life were very valuable. It is time that a biography of this leader is written for the benefit of the public of more than one country and further steps taken to perpetuate his cherished memory.

S. SIVASUBRAMANIAM
Life Member, Jaffna Saiva Paripalana Sabhai

in the most comprehensive style.

In bringing up the ideal father — ruler, Valluvar next places emphasis on the accessibility of the leader and his amiability in conversation

காட்சிக்கெளியன்
கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.

Carrying the idea further the Poet extols the virtues of the exemplary ruler- Kind words and graceful gifts. A ruler of the Valluvar conception will certainly be listened to by the whole world.

இசையாய் ஈந்தளிக்க
வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு

(To be continued)

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna ( Telephone: 356 ) on Friday, 9-2-1979.*

Editor-in-Chief:
R. N. Sivapirakasam

இலவசம்

Prove all things; Hold fast that which is good.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org